முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# எதிர்காலம் குறித்த
# இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த
# மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்

**(விளம்பி ஐப்பசி மாதம் 11ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 18ம் திகதி வரை**
**அக்டோபர் 28ம் திகதி முதல் நவம்பர் 4ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தரும பலம் கொண்ட தமிழகமே
தயவுமிக்க தலைமை கொண்ட
பெருமைமிக்க பாரதமே
புகலுவேன் இந்தியா தமிழகம் தன்னில்

2. தன்னிலே விளம்பி துலை திங்களில்
தாமுரைக்க லாபதிகதி மேல் மூவாறு திகதி வரை
(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முடிய)
மொழிகுவேன் எதிர்கால பலன் தன்னை
மண்ணுலகில் இந்த வார நிகழ்வாக

3. தன்னையே சுப்பிரமணியர் யானும்
தவராசன் அரங்கன் கேட்க
இன்னாளில் விளம்பி அருள்வேன்
இதுகாலம் தமிழக எல்லையில்

4. எல்லையில் மழை வளமுடன்
இயற்கை சமநிலை காட்டும்
வல்லமைபட புவியை சுரண்டும்
வஞ்சக நிலைகள் விலக

5. விலகவே மக்களுக்கு பாதுகாப்பு
விவசாய வளர்ச்சி பெருகும்
கலகமான கட்சிப் பாகுபாடு
கலியுகத்தில் மிகுதி கண்டாலும்

6. கண்டாலும் தமிழகம் தொட்டே
கட்டாயம் ஒற்றுமை நிலை
உண்டாகும் தேசம் எங்கும்
ஊழலை ஒழிக்க உலகளவில்

7. உலகளவில் செயல் மாற்றமாக
உண்மைவாதிகள் தமிழகம் தொட்டே
வளரும் மலரும் சடுதி
வாழ்வாதார தேடல் இருந்தாலும்

8. இருந்தாலும் ஆளுமை புரிபவர்கள்
இரக்கம் கொண்டு மக்கள்மேல்
வருந்தாத ஆட்சி புரியவே
வலுப்பெறும் தமிழகம் வளர்ச்சி பெறும்

9. வளர்ச்சி காண மத்திய ஆளுமை
வங்கி வழி பரிவர்த்தனை முடை
தளர்த்தவே தனிமனித வரவு பெருகும்
தலைநிமிரும் உலக சந்தையில்

10. சந்தையில் உலக அளவில்
சரிவு விலகி வர்த்தகம் பொருளாதாரமென
முந்தும் வளரும் இந்தியா தமிழகம்
முன்னேற்றம் காண தலைமை மக்களே

11. மக்களே தருமசிந்தை பெருக
மகான் அரங்க ஞானியரின்
தேக்கமிலா தருமவழிக்கு வர
தேற்றம் கண்டு கலியுகத்தில்

12. கலியுகத்தில் தலைமை சிறந்த
கண்டுரைப்பேன் ஞான ஆட்சி
அழியாமை மிக்க பலம் பெறும்
அறிவித்த சுப்பிரமணியரின் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தருமத்தின் பலத்தினை துணையாய் கொண்டிட்ட தமிழகமே தயவுமிக்க தலைமைகளை உடையதும் பெருமை மிக்கதுமாய் விளங்கும் பாரத தேசமே இந்த தேசத்தினில் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த வாரத்தினில் தமிழகத்தில் மழை அளவாக பெய்து சமநிலையில் இருக்கும். வல்லமைகள் கொண்டு அதிகார பலம் கொண்டு நாட்டினை சுரண்டும் வஞ்சக நிலைகள் விலகிவிட்டால் மக்களுக்கு பாதுகாப்பு பெருகிடும், விவசாய வளர்ச்சியும் பெருகும்.

கலகங்களை உண்டாக்கும் அரசியல் கட்சி பாகுபாடுகள் இந்த கலியுகத்தினில் அதிகம் இருந்தாலும் பலவிதமான குழுக்களாய் பாகுபாடுகள் அதிகம் இருந்தாலும் இனி வருங்காலம் மாற்றங்கள் தமிழகத்தில் இருந்து துவங்கி ஒற்றுமை வளர்ந்து அது நாடு முழுதும் பரவி நாடே ஒற்றுமை பெருகி ஒன்றுபட்ட இந்தியாவாக முருகப்பெருமான் அருளால் உண்டாகும்.

நாட்டினில் உள்ள ஊழலை ஒழித்திட உலகம் முழுதும் உள்ள நாடுகளெல்லாம் ஒன்றிணைந்து ஒருமித்த செயல்திட்டங்களை உருவாக்கிடும். அதன் முதல்படியாக தமிழகத்திலிருந்து பெரும் மாற்றங்கள் ஊழலை ஒழிக்கும்விதமாக வளர்ந்து மலரும்.

தங்கள் வாழ்க்கை சுகபோகமாக வாழ்வதற்காக பொருள் பற்று கொண்டு தவறான வழியில் செல்லாமல் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மக்கள் மீது இரக்கம் கொண்டு மக்களை வருத்தாத ஆட்சியை செய்திட்டால் தமிழகம் வலுப்பெறும், தமிழகம் வளர்ச்சி பெறும்.

இந்தியா வளர்ச்சி அடைய மத்தியை ஆளும் அரசு, வங்கிகள் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகள் மீது உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தி பணபரிவர்த்தனைகளை தாராளமாக்கினால் தனி மனித வரவு பெருகும். இந்தியா உலகினில் தலைநிமிரும் உலகச் சந்தையில் மேன்மையடையும். உலக அளவில் உள்ள சரிவுகள் எல்லாம் மாறி வர்த்தகத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைந்து உலக சந்தையில் போட்டிப்போடும், நல்ல வளர்ச்சியினை அடையும்.

இந்தியாவும், தமிழகமும் நல்ல முன்னேற்றம் காண வேண்டுமாயின் அவற்றை ஆட்சி செய்யும் தலைமை மக்களே, தலைமை பொறுப்பில் உள்ளவர்களே நீங்களெல்லாம் உங்களது மனதில் தர்மசிந்தையை வளர்த்து தருமத்தின் வழியில் நடந்து மக்களை காத்திட நீங்களெல்லாம் தருமத்தின் பாதையில் மக்களை அழைத்து ஞானமளிக்கும் மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் தடையற்ற முன்னேற்றங்களை தருகின்ற தருமத்தின் வழிதனை கொள்கையாக நீங்களெல்லாம் ஏற்றுக் கொண்டு நடந்து வர, நீங்கள் கடைத்தேறி கலியுகத்தினில் சிறந்த தலைமையாளர்களாக மாறி உலகினில் ஞானஆட்சி உருவாகி அழியாமைமிக்க இயற்கை பேரிடர் இல்லாத பாதுகாப்புமிக்க தேசமாக மாறி சர்வபலம்தனை பெற்று மக்களும் மகிழ்வுடன் வாழ்வார்கள் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–